# திரு மு. ஜெயசங்கர்




வீரத்துக்கும், வெற்றிக்கும், மணக்கும் தமிழுக்கும் பெயர் பெற்ற, கரிசல் மண்ணின் தனிப் புதல்வர். ஒரு சிறந்த தமிழ் படைப்பாளர். சுவைஞர், பேச்சில் நகைச்சுவை மிளிரும். எதிர்மறையாகப் பேசி, தீர்வு காணும் வல்லமைக் கொண்டவர்.

அன்றைய நெல்லை மாவட்டத்தில், சங்கரன் கோயிலில் பிறந்து வளர்ந்த இவர், சென்னை சுங்கத்துறையில் உதவி ஆணையராக பணிபுரிந்து வருகிறார். சென்னையை வசிப்பிடமாகக் கொண்டு வாழ்ந்து வருகிறார். கவிதை புனையும் ஆற்றல் கொண்டவர். அவ்வபோது, எழுதுவார். சிறந்த சிந்தனையின் வெளிப்பாடு அதனுள் மிளிரும்.

சுங்கத்துறையில், நண்பர்களோடு, இயைந்து, சுங்கமுரசு எனும் பெயரில், இலக்கிய தனிச்சுற்று இதழில் பயணித்தவர். சென்னை சுங்கத்துறை அலுவலகத்தில், முதன் முறையாகத் தமிழில், சுங்க இல்லம் என பெயர்ப்பலகை அமையக் காரணமானவர்.

திரு மு. ஜெயசங்கர், அவ்வபோது, எழுதிய கவிதைகள் சில ஈண்டு, வெளியிடப் படுகின்றன. படித்துச் சுவையுங்கள்.









# குழந்தைகளின் மாறுவேடப் போட்டியின் போது!

பூப் பூவாய் தவழ்ந்து வருது;
பட்டு பட்டு சுட்டிஸ்!
கட்டுப் பட்டு நடக்குதுங்க!
இஷ்டப் பட்டு குட்டீஸ்
பட்டை போட்டு ஒன்று என்றால்,
மொட்டைப் போட்டு ஒன்று
சுண்டு விரல் சூப்பும் வயது;
அற்புதமாய் இன்று,
ஒன்று சேர்ந்து வருகுது பார்;
ஓரமாக நின்று!



ஒய்யாரமாப் போகும்—இது
ஊஞ்சல் போல ஆடும்!
சஞ்சாரம் இது சிங்காரம் – எல்லாம்
ஏஞ்சல் போல ஆடும்!
பாடும் கிளி பறந்து வந்தா,
பாட்டு ஒன்னு கேட்கும்!
மழலை மொழி குரல் கேட்டு,
காகம் குயில் கூடும்!
கூடி வந்தக் கூட்டம் – இது
கொண்டாட்டம் தான் – போங்க!

தூக்கம் இல்லா இரவுக்கிது;
இன்பமான காட்சி!
மாசில்லாத மாட்சி - இது,
மழலை செய்யும் ஆட்சி!
சூதுவாது சூழல் இல்லை!
சொல்லில் ஒரு சூடும் இல்லை!!
ஏதுவான குறும்புகளில்,
அரும்பு செய்யும் ஆட்சி! - தாயின்
கண் அசைவில் நடக்குது பார்!
களிப்புடனேக் காட்சி!



சொக்கிப் போகும் காட்சியிது!
சொல்ல ஒரு வார்த்தை இல்லை!
அருவி போல ஓட்டம்!- இது,
அர்த்தமுள்ள ஜாலம்!
மழலை சொல்லின் மந்திரமோ! - இல்லை,
மாயன் செய்யும் தந்திரமோ!
பூப் பூவாய் தவழ்ந்து வருது!!
பட்டு பட்டு சுட்டிஸ்!
கட்டுப் பட்டு நடக்குதுங்க!
இஷ்டப் பட்டு குட்டீஸ்!!!

……. மு. ஜெயசங்கர்

# அன்னையர் தின வாழ்த்து!

பெண்ணாய் பிறந்தற்கு
பெருவுவகை கொள்வதூம்
அன்னை நிலை அடைந்தற்கு
கர்வநிலைஅடைவதும்
எங்கள் நிலை முன் செல்ல
பின் நிற்கும் எதிர் பாலர்
இயல்பாலே இயம்புகின்ற
வாழ்த்து கண்டு - நானும்
இன்முறுவல் பூக்கின்றேன்!

முத்தான (முத்து கிருஷ்ணன்) பிள்ளை வாயால்
முதல் வாழ்த்து பெற்று விட்டேன்!
உன் சத்தான வார்த்தைகளில்
மலர் கொத்தாக மகிழ்ச்சி கண்டேன்!

பத்து நிற வார்த்தைகளில்
பண்பான வாழ்த்துக்கள் - பரமேஷ்வரிக்கு
மகிழ்ச்சி பொங்க கூறுகின்றேன்
மங்கலமாய் வாழ்த்துக்கள் - மஞ்சுவுக்கு
புது வாழ்த்து கூறுகின்றேன்
புன்னகைக்கும் - புவனேஸ்வரிக்கு
ஆனந்தமாய் நானும்
நவில்கின்றேன் வாழ்த்துக்கள் - அக்காவுக்கு!

.. மு. ஜெயசங்கர்





**தமிழுக்கு**
'அ' என்னும்
உயிர் எழுத்து
எப்படி
முதல் சொந்தமோ
அது போல
'அம்மா'
என்ற உயிர்
எல்லா
உயிரின வர்க்கத்தினருக்கும்,
முதல் சொந்தம்!
முதல் ஆசிரியர்!!
முதல் நண்பன்!
முதல் கடவுள்!!

**அன்னையர் தின வாழ்த்துக்கள்!**

.. மு. ஜெயசங்கர்

## புத்தாண்டின் போது!




மலரும் பூவின் இதழொன்று விரிய
இருக்கும் நறுமணம் இயல்புகள் மாறும்
நடுநிசி வானம் அடைக்கலம் தேடும்!

ஒளிவிடும் ஞாயிறு தன்னொளித் தந்து
நிலவொளி ஆகி நின்று மறையும்
வந்தது ஆங்கே பனிரெண்டு மணியாள்!

மன்னன் மயங்கும் மகுடி வேதம்
அந்தணன் இசையில் அவுத்துக்கிறங்கும்
சீரிய நன்னாள் முதலாய் வந்தது !

வாழ்த்துரை வழங்கும் வானர்கள் அழைத்தேன்
தூதராய் என்னை தூளிபாடச் சொன்னார்
நானும் சொன்னேன்...

வாழ்த்துக்கள் என்று!
புத்தாண்டு வாழ்த்துக்கள் என்று !!
எனையும் வாழ்த்துங்கள் என்று!!!

.. மு. ஜெயசங்கர்

## செவிலியர் தின வாழ்த்து!

தேர் கொண்ட மன்ன ரெல்லாம் தெரு வீதி வந்த துண்டு
மக்கள் மனம் காத்து மேதினியில் புகழ் காத்துப் போன துண்டு
உளம் காத்த உறவெல்லாம் விழி காக்க வந்த துண்டு - தன்
உறவாலே உறவாடி உயிர் காத்துப் போன துண்டு

செருக்காளும் செல்வத்தார் தாராளம் செய்த துண்டு - தனை
மகிழ்வூட்டும் மாந்தர் தனை அரணாகக் காத்த துண்டு
செஞ்சோற்று கடன் பட்டார் பிறர் செம்மையுறப் பார்த்த துண்டு - தன்
வாழ்வோடு வாழ்வாங்கு வளம் காண வைத்த துண்டு
எதிர்பார்ப்பு இல்லாமல்
ஏமாற்றம் கொள்ளாமல்
இயல்பான தன் குணத்தால் - பிறர்
நோய் காத்த **நைட்டிங்கேல்!**

இவள் வழி வாழ்ந்து நல் கரம் கோத்து
கண் துயில் இழந்து நம் துணை இருந்து
கடும் நோய் தீர வழி காட்டும்
வான் நிலத்துத் தேவதைகள்
நோய் நீக்கும் வெண் புறாக்கள்



பிறர் ஒளி காக்க உயிர் காக்க
ஒப்புயர்வாய் உடல் காக்க - தன்
நலம் மறந்து சுகம் இழந்து
ஓயாமல் போராடும்

**உத்தமத் தாய்மார்கள் - நம்**
**செவிலியர்கள்!**

வாழியவே! வாழியவே!! எந்நாளும் வாழியவே!!!

**.......•• மு• ஜெயசங்கர்**